# புலித்தோல் போர்த்திய கழுதை



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்


www.worldtamilacademy.com

# புலித்தோல் போர்த்திய கழுதை

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# புலித்தோல் போர்த்திய கழுதை





ஒரு கிராமத்தில் வேலன் என்ற விவசாயிடம் கழுதை ஒன்று இருந்தது. அவன் மிகவும் ஏழை, அதனால் கழுதைக்குச் சரியாக உணவு அளிக்க முடியவில்லை. என்ன செய்வது? என்று தெரியாமல் அக்கழுதையின் அருகில் நின்று புலம்பினான். ஒரு நாள் அவன் மலையடிவாரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். செல்லும் வழியில் புலி ஒன்று இறந்து கிடந்தது.

உடனே அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.



புலியின் தோலை மட்டும் வீட்டிற்கு எடுத்து வந்தான். இரவில் அந்தத் தோலை கழுதையின் மேல் போட்டு பக்கத்து வீட்டுக்காரரின் வயலில் மேய விட்டான். அவர் புலி என்று நினைத்து பயத்தில் அங்கிருந்து ஓடிவிட்டார். இப்படியே தொடர்ந்து சில நாட்கள் சென்றன. கழுதையும் நன்றாக வயலில் உள்ளவற்றைச் சாப்பிட்டு கொழு கொழுவென மாறியது.



ஒரு நாள் இரவு கழுதை வயலில் மேய்ந்து கொண்டு இருக்கும் போது அந்தப் பக்கம் வந்த மற்றொரு கழுதை கத்தியது. அந்தச் சத்தம் கேட்டதும் வயலில் மேய்ந்த புலித்தோல் போர்த்திய கழுதையும் கத்தத் தொடங்கியது. இது புலி அல்ல கழுதை என்று தெரிந்த வயலின் சொந்தக்காரர் புலித்தோல் போர்த்திய கழுதையை அடி அடி என்று அடித்தார். கழுதையோ வலி தாங்காமல் இறந்தது.



# கதையின் நீதி

நாம் என்றும் நேர்மையாக செயல்பட வேண்டும்




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com